# திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் வழங்கிய விவிலியச் சிலுவைப்பாதை..



**பாரம்பரியச் சிலுவைப்பாதையிலிருந்து சிறிது வித்தியாசமான ஆனால் விவிலியத்தில் சொல்லப்பட்ட நிகழ்வுகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. இந்தச் சிலுவைப்பாதைத் திருத்தந்தையால் 1991 1994ஆம் ஆண்டுகளில் பெரிய வெள்ளி அன்று வழிநடத்தப்பட்டது.**

**முதலாம் நிலை:-** *இயேசு கெத்சமனித் தோட்டத்தில் செபிக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி கூறுகிறோம். ஏனெனில் உமது புனிதச் சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்**

**நற்செய்தி : லூக்கா 22: 39-44**

**செபம்: தந்தையே இறைவா! உமது ஒரேப்பேறான அன்பு மகன் இயேசுவின் மூலம் இந்த உலகத்திற்கு மீட்பைத் தரத் திருவுளம் கொண்டீரே! நாங்கள் திருமுழுக்கின் போது எடுத்துக் கொண்ட உறுதிப்பாட்டை மீண்டும் நினைவுக் கூர்கின்றோம். அதன் மூலம் பாவ வாழ்க்கையிலிருந்து விலகி மகிழ்ச்சி நிறைந்த தன்னலமற்ற புதுவாழ்விற்கு எங்களை அழைத்துச் செல்வீராக. உம் மகன் இயேசுவின் ஒவ்வொரு துளி இரத்தமும் எங்களைக் கழுவி மீட்பைத் தருவதாக! ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.**

**இரண்டாம் நிலை:-** *யூதாசு முத்தமிட இயேசு கைதுச் செய்யப்படுகிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 22: 47-48**

**செபம்: தந்தையே இறைவா! எங்கள் பலவீனங்களையும் குற்றங்குறைகளையும் உம் மகன் இயேசுவை ஏற்றுக்கொள்ளச் செய்தீர். ஆனால் பாவம் என்னும் முத்தத்தால் தினமும் இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறோம் என்ற உணர்வு எங்களில் எழ, அதன் மூலம் மனம் வருந்தி உமது வல்லமையில் நாங்கள் புனிதமடைய, உம் அன்பை இவ்வுலகிற்கு எடுத்துரைக்க அருள் புரிவீராக. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.**

**மூன்றாம் நிலை:-** *இயேசு தலைமைக்குருக்களால் தீரப்புக்குளாகிறார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 22: 66-70**

**செபம்: தந்தையே இறைவா! நிபந்தனையற்ற அன்பால் எங்களை என்றும் நேசிப்பவரே! உமது ஆறுதலாலும் அரவணைப்பாலும் நாங்கள் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளச் செய்வீராக. உமது மகனும் எங்கள் மீட்பருமான இயேசுவின் தியாக உள்ளத்தையும், தைரியத்தையும் எங்களுக்குத் தருவீராக! இதன் மூலம் பிறரைத் தீர்ப்பிடாமல் அவர்களுக்குச் சேவைச் செய்யும் மனப்பக்குவத்தைத எங்களுக்கத் தாரும். ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்**

**நான்காம் நிலை:-** *இயேசுவை பேதுரு மறுதலித்தார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 22: 54-60**

**செபம்: தந்தையே இறைவா! பேதுரு இயேசுவை மறுதலித்தப்போதிலும் மனம் கசிந்து அழுது வருந்திய அவரை நீர் ஏற்றுக் கொண்டு, உம் மந்தையின் ஆயனாக நியமித்தது செய்தது போல் உமக்காகவும், திருச்சபைக்காகவும் ஊழியம் புரிய எங்களுக்கு வரம் தாரும். எங்களில் விசுவாசத்தை அதிகப்படுத்தி, நாங்கள் எங்கள் சகோதரச் சகோதரிகளில் உம்மைக் காணவும், பொறாமை, பேராசை, அநீதி ஆகியன எங்களை விட்டு நீங்கவும் அருள்புரியும். ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்**

**ஐந்தாம் நிலை:-** *இயேசுவுக்குப் பிலாத்து மரணதண்டனை விதிக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : மத்தேயு 27: 11-14**

**செபம்: தந்தையே இறைவா! உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறியதால் படைக்கப் பட்டவனால் உலகைப் படைத்தவர் சிலுவைச்சாவுக்குத் தீர்ப்பிடப்படுகிறார். பல நேரங்களில் உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாமல் நாங்கள் தடுமாறும் வேளைகளில், எங்கள் உள்ளத்தில் உம் அன்பை ஏற்றி உமக்குரியவராக மாற்றி பாவத்தால் உமது நட்பை இழக்காமல் இருக்க அருள்புரிவீராக. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும் .**

**ஆறாம் நிலை:-** *இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு முள்முடி சுட்டப்பட்டார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 1-3**

**செபம்: தந்தையே இறைவா! உம் நேச மகன் அடிக்கப்பட்டு நொறுக்கப்பட்டு அவமானப்படுத்தப் பட்டதின் மூலம் உலகத்தின் பாவங்களையும் அதன் பரிசானச் சாவையும் வெல்ல வழிவகுத்தீரே! எங்களுக்கு ஏற்படும் நிந்தை அவமானங்களை நாங்களும் முழு மனதுடன் ஏற்றுக் கொள்ளவும், அதன் வழியே இயேசுவின் உயிர்ப்பில் மகிமைப் பெறவும் அருள்புரிவீராக. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும் .**

**ஏழாம் நிலை**:- *இயேசு சிலுவையைச் சுமக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 16-17**

**செபம்: தந்தையே இறைவா! உம் நேச மகன் இம்மனுக்குலத்தை மீட்கச் சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு சென்றாரே! அவர் சுமந்தச் சிலுவையே எங்கள் வாழ்வில் வெற்றியைத் தந்தது. பிறரால் எங்களுக்கு ஏற்படும் சிலுவைகளை நாங்கள் தியாக உள்ளத்துடன் ஏற்றுச் சுமந்துச் செல்ல நாங்கள் வாழும் சமுதாயத்தில் இயேசுவுக்குச் சாட்சியாக வாழ அருள்புரிவீராக. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.**

**எட்டாம் நிலை:-** *இயேசுவுக்குச் சீமோன் உதவுகிறார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 23: 26**

**செபம்: தந்தையே இறைவா! சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவுடன் சிலுவைச் சுமந்துச் சென்றதைப் போல் எங்கள் வாழ்வில் வரும் துன்பத் துயரங்களை ஏற்றுக்கொள்ள மனத்திடனையும் ஆழ்ந்த விசுவாசத்தையும் உமது ஆறுதலையும் எங்களுக்குத் தாரும். சீமோனைப் போல் வாழ்வில் துன்பப்படுவோருக்கு உதவும் நல்லெண்ணத்தை எங்களுக்குத் தாரும். எப்போதும் எங்களுடன் நீர் இருப்பதை உணர்ந்து வாழ அருள்புரிவீராக.. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும் .**

**ஒன்பதாம் நிலை:-** *இயேசு வழியில் எருசேலம் பெண்களைச் சந்திக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 23: 27-29**

**செபம்: தந்தையே இறைவா! மாசற்ற இயேசுவுக்கு நேர்ந்த கொடுமைகளைக் கண்ட எருசேலம் மகளிர் அவரை எதிர்கொண்டபோது ‘‘எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்’’ என்று ஆறுதல் தந்தீரே! எங்களாலும் எங்கள்**

**பிள்ளைகளாலும் நேர்ந்த நிந்தை அவமானத்தால் உம்மைக் காயப்படுத்தியதற்காக வருந்துகிறோம். எங்கள் குடும்பம் உமது கோவிலாக மாற அருள்புரிவீராக.. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும் .**

**பத்தாம் நிலை:-** *இயேசு சிலுவையில் அறையப்படுகிறார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 17-19**

**செபம்: எங்கள் விடுதலை நாயகனே! அன்பு இயேசுவே! அவமானச் சின்னமாகிய சிலுவையில் எங்களுக்காக மரிக்க உம்மைக் கையளித்தீரே! அந்த அவமானச் சின்னம் சாவை வென்று எங்கள் வாழ்வின் வெற்றியின் சின்னமாக மாறியது உம் அன்பால் அன்றோ! எங்களுக்கு ஏற்படும் அவமானங்கள் எல்லாம் வெற்றியின் படிக்கட்டுகளாக அமைய அருள்புரிவீராக. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும் .**

**பதினொன்றாம் நிலை:-** *இயேசு கள்வனுக்கு விண்ணக வாழ்வை அளிக்கிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : லூக்கா 23:39-43**

**செபம்: அன்பு இயேசுவே! மனந்திருந்தி நற்செய்தியை ஏற்றுக் கொண்டால் புதுவாழ்வுப் பெறுவீர் என்பதை எங்களுக்கு இந்த நல்ல கள்வன் மூலம் உணர்த்தினீரே. இந்தத் தத்துவத்தை உணர்ந்தவர்களாக மனம் திருந்தி, உமது இல்லமாகவும் உமது சீடர்களாகவும் நாங்கள் வாழப் பரிசுத்த ஆவி எங்களை வழிநடத்த உம்மை மன்றாடுகிறோம். ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.**

**பனிரெண்டாம் நிலை:-** *இயேசு தன் தாயிடம் பேசுகிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 26-27**

**செபம்: அன்பு இயேசுவே! இதோ உன் மகன் என்று அன்னை மரியாளிடம் எங்களையும் இதோ உன் தாய் என்று அன்னை மரியாளை எங்களுக்கு அன்னையாகவும் கொடுத்தீரே. அந்த அன்னை மரியாளின் நிகரற்ற அன்பையும், விவேகத்தையும், தனித்து நின்றுப் போராடிய மனவலிமையையும் எங்களுக்குத் தாரும். அன்னையின் அருளும் பரிந்துரையும் எங்களோடு எப்பொழுதும் இருப்பதை உணர்ந்தவரகளாய் நாங்கள் உமக்காக இவ்வுலகில் வாழ்ந்திட அருள் வரம் தாரும். ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.**

**பதிமூன்றாம் நிலை:-** *இயேசு தன் சிலுவையில் மரிக்கிறார்*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : யோவான் 19: 28-30**

**செபம்: அன்பு இறைவா! மனிதனைப் போல இயேசுவும் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டு அதனை வெற்றிக் கொள்ள உதவினீரே. அந்த மரணத்தால் எங்களுக்குப் புதுவாழ்வு அளித்தீரே! எந்நாளும் இயேசு காட்டிய வழியில் வாழ்ந்து அவரில் மரித்து உம் வான்வீட்டை வந்தடைய எங்களுக்கு அருள்வரம் தருவீராக! ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும்.**

**பதிநான்காம் நிலை:-** *இயேசு கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : மாற்கு 15: 43-46**

**செபம்: அன்பு இறைவா! தமக்கென ஒன்றும் இல்லாத நிலையில் தம்மையே அளித்த அன்பு இயேசுவிற்குக் கல்லறைக் கூட அடுத்தவர் அளிக்கும் நிலை ஏன்? எல்லாம் எங்களிடம் நிலைக்கொண்டுள்ள சுயநலத்தால் தான்! தனக்கென எதுவுமில்லாமலிருந்த எங்கள் நல்ல ஆயனைப் போல் நாங்களும் சுயநலம் இழந்துப் பிறர்நலம் காண அருள்வீராக! இதன் மூலம் உம் மனிதநேயம் இவ்வுலகில் அனைவருக்கும் சென்று அடையத் துணைபுரிவீராக! ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும் .**

**பதினைந்தாம் நிலை:-** *இயேசு உயிரத்தெழுந்தார்.*

**திவ்விய இயேசுவே! .....**

**நற்செய்தி : மாற்கு 16: 4-6**

**செபம்: வெற்றித் திருநாயகனே! மரணத்தை வென்ற வேந்தனே! இறைவனின் திட்டத்தை முழுமையாக்கியவரே! விண்ணக வீட்டில் எங்களுக்கு நீர் செய்துள்ள ஏற்பாடுகளில் நிலையாய் பங்கு கொள்ள ஆவலுடன் காத்திருக்கும் எங்களை நீரே வழிநடத்தும். இவ்வுலகில் அதற்கு ஏற்ப எங்கள் வாழ்வு அமைந்திட நீர் எங்களின் உள்ளும் எங்கள் முன்னும் பின்னும் எங்களைச் சுற்றியும் அரணாயிருந்து எங்களை உம் வழியில் நடத்துவீராக. ஆமென்.**

**அன்பு இயேசுவே! நாங்கள் உமது பாதையில் நடந்திட உதவியருளும் .**

*தொகுப்பு : அன்பின் மடல் ஆசிரியர் குழு*

*தனிச் சுற்றுக்கு மட்டும்*

***www.anbinmadal.org***